



சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கில் நேற்று முன்தினம் (04.08.2024) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பள்ளிக் கல்வித் துறை சார்பில் 2023 – 2024 ஆம் கல்வியாண்டில் நடைபெற்ற சர்வதேச / தேசிய / மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் ஐ.பரந்தாமன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி, பள்ளிக் கல்வித் துறை அரசுச் செயலாளர் திருமதி சோ.மதுமதி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ. சங்கர், பள்ளிக்கல்வி இயக்குநர்கள் முனைவர் ச. கண்ணப்பன், முனைவர் மு. பழனிச்சாமி மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## பெண் கல்வியில் பெரியார் – கலைஞரின் மகிழ்ச்சிதான்

# ‘திராவிட மாடல்’ அரசின் ஒரே லட்சியம்!

## தனியார் பள்ளிகள் - மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

**சென்னை, ஆக.6–**

**சென்னை, ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டு அரங்கில் நடைபெற்ற தனியார் பள்ளிகள்,விளையாட்டு வீரர்கள், மாணவர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ் வழங்கும் விழாவில், கலந்துகொண்டு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சான்றிதழ்கள் வழங்கிப் பேசினார்.**

சென்னையில், 2023 - 2024 ஆம் கல்வியாண்டில் நடைபெற்ற சர்வதேச - தேசிய மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் பெற்ற மாணவ மாணவியர் மற்றும் 10 - 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் 100% தேர்ச்சி பெற்ற தனியார் பள்ளிகளுக்குப் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கும் விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு, ``பெண்கள் கல்வியில் முன்னேறி வருவதைப் பார்த்து, பெரியாருக்கும் கலைஞருக்கும் ஏற்பட்ட மகிழ்ச்சிதான், திராவிட மாடல் அரசின் ஒரே லட்சியம்! ” என்று அப்போது குறிப்பிட்டார்.

விழாவில், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையின் முழு விவரம் வருமாறு:

சென்ற கல்வி ஆண்டில் நடைபெற்ற சர்வதேச தேசிய மற்றும் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்களை வென்ற மாணவ மாணவியர்களுக்கும், அதேபோல் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வுகளில் 100 சதவிகிதத் தேர்ச்சி பெற்ற தனியார் பள்ளிகளுக்கும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்குகிற இந்தச் சிறப்பான விழாவில், பங்கேற்பதில் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன். இந்த விழாவில் பங்கேற்கும் வாய்ப்பை எனக்குத் தந்த பள்ளிக் கல்வித்துறையின் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களுக்கு மீண்டும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### உற்சாகமும் மகிழ்ச்சியும்

இன்று, ஞாயிற்றுக்கிழமை நீங்கள் எல்லாம் வீட்டில் ஓய்வெடுத்து இருக்க வேண்டும். ஆனால் `இங்கு அழைத்து வந்து விட்டார்களே’ என்ற கவலை ஏதுமின்றி உற்சாகத்தோடு இங்கு வந்திருக்கிறீர்கள். உங்களைப் பார்க்கும் போது அதே உற்சாகமும் மகிழ்ச்சியும் எங்களுக்கும் வந்திருக்கிறது.

திராவிட இயக்கத்திலிருந்து வருகின்ற ஒவ்வொரு தொண்டனுக்கும் படிக்கிற மாணவர்களைப் பார்த்தால், ஒரு தனி மகிழ்ச்சி ஏற்படும். அதற்கு எடுத்துக்காட்டாக ஒரு நிகழ்ச்சியைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒருமுறை தந்தை பெரியார் அவர்கள் ஒரு பொதுக்கூட்டத்தை முடித்துவிட்டு, சாலையில் அவரின் வாகனத்தில் சென்று கொண்டிருந்தார். அந்த வழியாக, பெண் குழந்தைகள் பள்ளிக்கூடம் முடித்துவிட்டு வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தார்கள். பெரியாருக்கு அப்போது 94 வயது.

### பெரியார் ரசித்து மகிழ்ந்தார்

அவரின் வாகனத்தில் உட்கார்ந்தபடியே அந்தக் காட்சியைப் பார்த்துவிட்டு, ஒரு சின்னக்குழந்தையைப் போல உற்சாகமாக, சீருடை அணிந்து வந்த பெண் குழந்தைகளைப் பார்த்துக் கைத்தட்டி ரசித்து மகிழ்ந்தார். `இதற்குத்தானே நான் காலம் முழுக்கப் போராடினேன். திராவிட இயக்கத்தின் பலனை இதோ என் கண் முன்னாடியே பார்த்துவிட்டேன்’ என்று மகிழ்ச்சியில் துள்ளினார் பெரியார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்தபோது மாணவ மாணவியர் பள்ளிக்கு நடந்து போகக் கூடாது என்று,



அவர்களுக்கு `இலவச பஸ் பாஸ்’ வழங்கி, பேருந்தில் போக வைத்தார். பெரியாருக்கும் கலைஞருக்கும் ஏற்பட்ட அந்த மகிழ்ச்சிதான், இன்றைக்கு இங்கு வந்துள்ள மாணவச் செல்வங்கள் உங்களை எல்லாம் பார்க்கும்போது எங்கள் அத்தனைப் பேருக்கும் ஏற்படுகிறது.

### ஒரே லட்சியம்!

இந்த மகிழ்ச்சி எல்லா நாளும் தொடர வேண்டும் என்பதுதான் நம் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் ஒரே லட்சியம், நம் குழந்தைகள் அனைவரும் பள்ளிப் படிப்பை நன்றாகப் படிக்க வேண்டும். பள்ளிப்படிப்பை முடிக்கிற அத்தனை மாணவர்களும் உயர்கல்வியிலும் சேர வேண்டும். உயர்கல்வியில் படிக்கிற மாணவர்கள் எல்லாம் இன்ஜினீயர்களாக, ஆராய்ச்சியாளர்களாக, டாக்டர்களாக, அரசு அதிகாரிகளாக பெரிய பெரிய பொறுப்புகளுக்கு வர வேண்டும் என்பதுதான் நம் முதலமைச்சர் அவர்களின், நம் ‘திராவிட மாடல்’ அரசின் ஒரே லட்சியம்.

அதற்கு ஏற்றவாறுதான் நம் முதலமைச்சர் அவர்கள், பல திட்டங்களைத் தந்து கொண்டிருக்கிறார்கள். நம் முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தவரை அரசுப் பள்ளி, தனியார் பள்ளி என்று அவர் பிரித்துப் பார்ப்பது கிடையாது. இன்னும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், தனியார் பள்ளிகளில் இருக்கிற வசதிகள் அனைத்தும் அரசு பள்ளிகளுக்கும் வர வேண்டும் என்றுதான் ஒவ்வொரு திட்டத்தையும் அவர் பார்த்துப் பார்த்து செய்து கொண்டிருக்கிறார்.

### முன்னேறிய மாநிலம்

தமிழ்நாடு, கல்வியில் இன்று முன்னேறிய மாநிலமாக இருக்கிறது என்றால் அதற்காக நம் ‘திராவிட மாடல்’ அரசு எடுக்கிற நடவடிக்கைகளுக்குத் தனியார் பள்ளிகள் நீங்கள் அளிக்கிற ஒத்துழைப்பு மிக மிக முக்கியமானது. இன்றைக்குப் பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு, கல்லூரியில் சேராமல் இருக்கும் மாணவர்களை எல்லாம் தொடர்பு கொண்டு, அவர்களையெல்லாம் உயர் கல்வியில் சேர்க்க வேண்டும் என்பதற்காகத் தான் நம் அரசு தனிமுயற்சி எடுத்து வருகின்றது.

விளையாட்டில் சிறந்து விளங்குகிற மாணவர்களுக்கும் எல்லா வகையிலும் உதவத் தயாராக இருக்கிறது. விளையாட்டுத் துறையில் சாதிக்கின்ற திறமையாளர்களுக்கு உதவிட, தமிழ்நாடு அரசு இந்தியாவிலேயே முதன் முறையாக `தமிழ்நாடு சாம்பியன்ஸ் பவுண்டேஷன்’ என்ற அறக்கட்டளை தொடங்கப்பட்டு இருக்கிறது. இந்த அறக்கட்டளையின் மூலமாக நூற்றுக்கணக்கான விளையாட்டு வீரர்களுக்கு இந்த ஒரு வருடத்தில் மட்டும் அவர்களுக்கு உயரிய ஊக்கத் தொகை, ரூபாய் 10 கோடி அளவில் நிதி உதவி வழங்கப்படுகிறது.

இது தவிர சர்வதேச தேசிய அளவிலான போட்டிகளில் சாதிக்கிற மாணவர்களுக்குச் சிறிய ஊக்கத்தொகை வழங்கி, நம் தமிழ்நாடு அரசு கௌரவப்படுத்தி வருகிறது. ஊக்கப்படுத்தி வருகிறது. இன்று இங்கு பாராட்டுச் சான்றிதழ்களைப் பெற்றிருக்கின்ற மாணவ மாணவிகள் நாளை தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்க்கிற வகையில், தொடர்ந்து பல்வேறு போட்டிகளில் பங்கேற்று பதக்கங்களையும் பட்டங்களையும் பெறவேண்டும். அதற்கு என்னென்ன தேவையோ, அத்தனை உதவிகளையும் செய்து தர நம் தமிழ்நாடு அரசு தயாராக இருக்கிறது.

### உண்மையான படிப்பு

மாணவர்களாகிய நீங்கள், உங்களின் திறமைகளை வளர்த்துக் கொள்வதில் மட்டும் நன்றாகக் கவனம் செலுத்துங்கள். இந்த நேரத்தில் மாணவர்களுக்கும் தனியார் பள்ளிகளைச் சேர்ந்தவர்களுக்கும் ஒரு விஷயத்தைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். படிப்பு என்று சொன்னால், பாடத்தில் உள்ளதை மட்டுமே வெறுமனே மனப்பாடம் செய்து தேர்வில் எழுதி, மதிப்பெண்கள் பெறுவது கிடையாது. உண்மையான படிப்பு என்றால், பாடத்தில் உள்ளதை நன்றாகப் புரிந்து கொண்டு படிக்க வேண்டும். அறிவைப் பயன்படுத்துபவர்களுக்கு மட்டும், எல்லா இடத்திலும் மரியாதையும் சிறப்பும் தானாகவே கிடைக்கும். அறிவைப் பயன்படுத்தாமல் வைத்திருப்பதால், எந்தப் பயனும் இல்லை.

### நூற்றாண்டு நூலகங்கள்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பேரறிஞர் அண்ணா நூற்றாண்டை முன்னிட்டு, `அண்ணா நூற்றாண்டு நூலகத்தை’ சென்னையில் திறந்து வைத்தார்கள். நம் முதலமைச்சர் அவர்கள் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு `கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை’ மதுரையில் திறந்து வைத்தார்கள்.

பத்து லட்சத்திற்கும் அதிகமானவர்கள் அந்த நூலகத்திற்குச் சென்று படித்துள்ளார்கள். பல்வேறு ஊர்களில் இருந்து கலைஞர் நூலகத்திற்கு மாணவர்கள் படையெடுக்கிறார்கள். விரைவில், கோவையிலும் திருச்சியிலும் கலைஞர் நூற்றாண்டு நூலகங்கள் அமைய இருக்கின்றன.

### கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம்

கட்டாயக் கல்வி உரிமைச் சட்டப்படி, வறுமையில் இருக்கக்கூடிய குழந்தைகளுக்குத் தனியார் பள்ளிகளில் 25 சதவிகித இட ஒதுக்கீடு வழங்க வேண்டும். இந்தச் சட்டத்தைச் செயல்படுத்துவதில், இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக விளங்கி வருகிறது. இந்தச் சட்டத்தின்படி சேர்க்கப்பட்ட மாணவர்களுக்கான கல்விக் கட்டணத்துக்கான தொகையை ஆண்டு தோறும் தனியார் பள்ளிகளுக்கு அரசு வழங்க வேண்டும் என்பது சட்டம்.

ஆனால், முந்தைய ஆட்சிக் காலங்களில் இந்தத் தொகை தாமதமாகத்தான் தனியார் பள்ளிகளுக்கு வழங்கப்பட்டு வந்தது. நம் `திராவிட மாடல்’ அரசு பொறுப்பேற்ற பிறகு, சுமார் 1,200 கோடி ரூபாய் அளவிலான தொகை, பள்ளிகளுக்கு வழங்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இனிவரும் கல்வி ஆண்டுகளில் இந்தக் குழந்தைகளுக்கான கல்விக் கட்டணத் தொகை அந்தந்த ஆண்டே வழங்க, நம் முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அரசுப் பள்ளிகளின் வளர்ச்சியில் மட்டுமின்றி, தனியார் பள்ளிகளின் முன்னேற்றத்திற்கும் நம் `திராவிட மாடல்’ அரசு என்றைக்கும் துணை நிற்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கு நிறைய ஆசிரியர் பெருமக்களும் வந்திருக்கிறீர்கள். எப்போதும் சொல்வது போல் உங்களுக்கும் ஒரு வேண்டுகோள். விளையாட்டு வகுப்பை தயவு செய்து கடன் வாங்கி, கணிதம், அறிவியல் வகுப்புகளை நடத்தாதீர்கள். ஏனென்றால், பள்ளிக் கல்வித்துறையின் அமைச்சர் இந்த நிகழ்ச்சியை நடத்தி இருந்தாலும், இந்த நிகழ்ச்சி நடக்குமிடம், ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கம்.

### உடற்பயிற்சியும் விளையாட்டும்

கல்வி எவ்வளவு முக்கியமோ அதே அளவுக்கு உடற்பயிற்சியும் விளையாட்டும் முக்கியம். நன்றாக விளையாடும் குழந்தைக்கு நல்ல ஆரோக்கியம் கண்டிப்பாக இருக்கும். நல்ல ஆரோக்கியம் இருந்தால், கண்டிப்பாக நன்றாகப் படிப்பார்கள். ஆகவே, எனது விளையாட்டு வகுப்புகளைக் கடன் வாங்காதீர்கள் என்று கணிதம், அறிவியல் ஆசிரியர்களை மீண்டும் நான் கேட்டுக்கொண்டு, இங்கு பாராட்டுச் சான்றிதழ் பெற்றுள்ள தனியார் பள்ளிகளுக்கும் மாணவர்களுக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

இந்த விழாவில் அமைச்சர்கள் அன்பில் மகேஷ்பொய்யாமொழி, மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர் பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சென்னை மாநகர மேயர் பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் ஐ. பரந்தாமன், ஆர்.டி.சேகர், தாயகம் கவி, மயிலை வேலு, ஜோசப் சாமுவேல், மருத்துவர் எழிலன், வெற்றியழகன், எபினேசர், பிரபாகர் ராஜா, `ஐ ட்ரீம்’ மூர்த்தி,

தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, பள்ளிக் கல்வித்துறையின் செயலாளர் மதுமதி ஐ.ஏ.எஸ், பாடநூல் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் முனைவர் சங்கர் ஐ.ஏ.எஸ், பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர் கண்ணப்பன், தனியார் பள்ளிக் கல்வி இயக்குநர், முனைவர் பழனிச்சாமி, தமிழ்நாடு மாநில பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் துணைத் தலைவர் முத்துக்குமார், பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் மாநில உறுப்பினர் ராஜீவ் காந்தி, அரசு தேர்வுகள் துறை இயக்குநர் லதா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ரவிச்சந்திரன், கே.எஸ்.மூர்த்தி, சி.எச்.சேகர், பி.டி.அரசகுமார், தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தின் மாநிலத் தலைவர் தியாகராஜன், தனியார் பள்ளிகள் சங்கங்களின் கூட்டமைப்பு நிர்வாகிகள், தாளாளர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.

